# குடும்பத்தினரும் நண்பர்களும் தாய்ப் பாலூட்டலை வெற்றிகரமாக்கலாம்



## உதவுவதற்கான சில வழிகள் இதோ:

### தகவல் பெறுங்கள்

- தாய்ப் பாலூட்டலைப்* பற்றி உங்களால் முடிந்தளவு அதிகமாகத் தகவல் பெறுங்கள்.
- நண்பர்கள், உறவினர்கள், ஏனைய தாய்ப் பாலூட்டும் குடும்பங்கள், சுகாதார நிபுணர்கள் ஆகியோருடன் உரையாடுங்கள்.

### புதிய பெற்றோரைத் தூண்டுங்கள்

- புதிய தாய்ப் பாலூட்டும் பெற்றோர் தமது குழந்தைக்கு போதியளவு தாய்ப் பால்* தம்மிடம் இல்லையெனக் கவலைப்படக் கூடும்.
- தாய்ப் பாலூட்டும் பெரும்பாலானோருக்கு போதியளவை விடக் கூடுதலான தாய்ப் பாலுண்டு.
- உங்களுக்கு அவர்களில் நம்பிக்கை இருப்பதாகவும் நீங்கள் உதவலாம் என்றும் அவர்களுக்குக் கூறுங்கள்.

### காலமும் இடமும் வழங்குங்கள்

- தொலைபேசி அழைப்புக்களை மட்டுப்படுத்துவதுடன் உங்களது சந்திப்புக்களைக் குறுகியனவாக வைத்துக் கொள்ளுங்கள்.

→

*Breastfeeding/breast milk are also known as chestfeeding/ chest milk respectively.

## அன்றாட வேலைகளில் உதவுங்கள்

- உணவு தயாரித்தல், பீங்கான்களும் கழுவுதலும், வீட்டை ஒழுங்காக வைத்திருத்தல், ஏனைய பிள்ளைகளைப் பராமரித்தல் போன்ற அன்றாட விடயங்களில் உதவுங்கள்.

## குழந்தை தொடர்பில் உதவுங்கள்

- குழந்தைகள் பல காரணங்களுக்காக அழுகின்றன - வெறுமனே பசிக்காகவன்று. குழந்தையை தோலுடன் தோல் சேரத் தூக்குதல், குழந்தையைத் தூக்கிக் கொண்டு நடத்தல், பாடுதல், ஆடுதல் என்பன போன்று குழந்தையை அரவணைக்கும் வித்தியாசமான வழிகளைக் கற்றுக் கொள்ளுங்கள்.
- குளிப்பாட்டுவதும் சிறுநீர்த் துணியை மாற்றுவதும் குழந்தையை அறிந்து கொள்வதற்கான ஏனைய வழிகளாகும்.

## நடைமுறைச் சாத்தியமான எதிர்பார்ப்புக்களைக் கொண்டிருங்கள்

- ஒரு புதிய குழந்தை வாழ்க்கையை என்றென்றைக்கும் மாற்றுகிறது. பெற்றோருக்கு இம்மாற்றங்களைப் பற்றி பல்வேறுபட்ட உணர்வுகள் இருப்பது சாதாரணமானதே.
- அவர்கள் எவ்வாறு உணர்வது அவர்களுக்கு உதவுமென பெற்றோரிடம் கேளுங்கள். உங்களது ஆதரவு முக்கியமானது.

## உதவி பெறுங்கள்

- தாய்ப் பாலூட்டல் தொடர்பில் விடயங்கள் சரியாக நடப்பதில்லையென பெற்றோர் உணர்ந்தால், உதவிக்காக அழையுங்கள்! ரொறன்ரோ பொதுச் சுகாதாரம் எல்லாக் குடும்பங்களுக்கும் தாய்ப் பாலூட்டல் உதவி வழங்குவதுடன் அவர்களை ஏனைய ஆதரவுகளுடன் தொடர்புபடுத்தலாம்.

**ரொறன்ரோ பொதுச் சுகாதாரம் தாய்ப்பாலூட்டுவதை ஆதரிக்கும் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் கொண்டிருப்பதுடன், சர்வதேச WHO/UNICEF குழந்தை நட்புறவுப் பெயரளிப்பைப் பெற்றுள்ளது.**



PH1602SS635